20—

காட்டுமன்னார் கோயில் தொகுதியில் பனைப்பொருள் பயிற்சி நிலையம் அமைத்தல்.

*21826—திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார் கோயில் தொகுதியில் பனைப்பொருள் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காட்டுமன்னார் கோவில் தொகுதியில் பனைப்பொருள் பயிற்சி நிலையம் அமைக்கும் வாய்ப்பு இல்லை.

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அரசு கேட்கும்போதெல்லாம் கொடுக்கிற அரசாக இருப்பதால்தான், இப்படியெல்லாம் கேட்கத் தோன்றுகிறது. கேட்காத பொதுமக்களின் பிரச்சினையைக்கூட, அலசி ஆராய்ந்து தமிழகம் முழுவதும் தீர்த்து வருவதால்தான், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சிதலைவி அவர்களுடைய அரசை—சிறந்த அரசை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு இந்தத் துணைக் கேள்வியைக் கேட்கிறேன். எனது மாவட்டத்திலே, கடலூரிலே ஒரு பயிற்சி நிலையம் உள்ளது. அதைப் பயிற்சி நிலையத்திற்கு நாங்கள் சென்று பயிற்சி எடுக்க வேண்டுமென்றால் ஏறத்தாழ 60 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. இது மாவட்டத்தின் தென்கோடிப் பகுதியாக இருப்பதால், அங்கே சென்று வருவதற்குச் சிரமமாக உள்ளது. மேலும், பனை மரங்களும், தென்னை மரங்களும், ஈச்ச மரங்களும் அங்கே அதிக அளவு உள்ளன. அங்கே, கச்சாப் பொருள்கள் வீணாகிற சூழ்நிலை உள்ளது. அவற்றைப் பயன்படுத்தும் பொருட்டு காட்டுமன்னார் கோயில் தொகுதியில் ஒரு பயிற்சி நிலையத்தை ஆரம்பிப்போமேயானால் அந்தப் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கும்போது, அங்கு உற்பத்தியும் தொடங்கக்கூடிய நிலை இருப்பதால் அரசுக்கு வருவாய் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. ஆகவே, மறுபரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் மா. புடையூரில் ஏற்கனவே ஒரு பனைப்பொருள் திட்ட மையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தின் மூலம்

1994 மார்ச் 17]

காட்டுமன்னார்கோவில் தொகுதிக்கு மட்டுமல்லாமல் இந்த மாவட்டத்தில்பனைபொருள்உற்பத்தியில்ஈடுபட்டு இருக்கும் அனைத்துத் தொழிலாளர்களின் போதியத் தேவையை நல்லமுறையில் நிறைவு செய்து வருகிறோம். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தப் பயிற்சி மையமானது தென்னகத்தே அமைந்துள்ள 4 மாநிலங்களுக்கும் பொதுவான மையமாக இருக்கும் காரணத்தால் அதை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கோ அல்லது அதனுடைய உபகிளைகளைத் தொடங்குவதற்கோ சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுதல் எதிர்காலத்தில் பரிசீலித்து கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. ஜானகிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்த தீர்மானம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரம் இன்னும் முடியவில்லை; உட்காருங்கள். திரு. என். ஆர். ராஜேந்திரன்.

திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைப் பயிற்சி மையமாவது காட்டு மன்னார் கோவிலில் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட மா. புடையூர் தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்திலே வருவதாக அறிகிறேன். எனவே தேவையினைக் கருதி தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்திற்கு எதிர்காலத்தில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன்.

திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரிலே மையமாகக் கொண்டு செயல்பட்டுக் கொண்டு வருகின்ற அந்தப் பயிற்சி மையத்தை மாற்றுவதற்கு முடியாது என்று சொன்னார்கள். அரசு அதிலே உறுதியாக இருக்குமா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் ஆணையத்தின் மூலம் நான்கு மாநிலங்களுக்கும் பொதுவாக அமைக்கப்பட்ட மையம் அது. எனவே அதை வேறு பகுதிக்கு மாற்றுவதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.